தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் உஉ	விய—கார்த்திகை 1946—நவம்பர்	மலர் அ

கரந்தைத் தமிழ்ச் சங்கப்பெருமன்றத்தில்
10—11—'46 நிகழ்ந்த
தமிழ்மொழி ஆக்கம் பற்றிய தமிழன்பர் பொதுக்கூட்டத்தில்
தலைமைதாங்கிய
முத்தமிழ் வள்ளல், இராவ் பகதூர், திருவாளர்,
A. Y. அருளாநந்தசாமி நாடார் அவர்கள்
ஆற்றிய

தலைமையுரை.

தமிழன்பர்களே!

ஒருநெருக்கடியான சமயத்தில் இங்கு, கூடியுள்ளோம். தமிழுக்கு ஆக்கந் தேடுவதென்ற பெயரால் தமிழுக்கு அழிவு தேடப்பட்டு வருகிறது. தமிழர்களை அறிவிலிகளாக்கி, அவர்கள் மீது செலுத்தப் பட்டுவரும் ஆதிக்கத்தை என்றென்றும் நிலைத்திருக்கும்படி செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. தமிழர், தமக்குப் பூட்டப் பட்டுள்ள அடிமைத் தளைகளை உணர்ந்து, தளைகளை உடைத்து, விடுதலையை நாடிச் செல்லும்போது ஒரு புதுவகையான விலங்கு செய்யப்பட்டு, மாட்டப்படுவதற்குச் சித்தமாக இருக்கிறது. இந்தத் தளை வலியதா? தமிழர் வீரம் வலியதா? என்பது இப்பொழுது தெளிவாக வேண்டும். இத்தகைய சமயத்தில், நாம் இங்கு, கூடியுள்ளோம்.

தமிழுக்கு ஆக்கந் தேடவேண்டும். இதில் யாருக்கும் மறுப்பில்லை. உலகிலே அறிவியல் வெகு விரைவாக வளர்ந்துகொண்டே போகிறது. கடல் மீதில் ஆணை செலுத்துவது மட்டுமல்ல, கடலுள்ளும் மக்கள் ஆணை செல்லுகிறது. ஆகாயம் அடிமை கொள்ளப் பட்டுவிட்டது. அணுவும் பிளக்கப்பட்டுவிட்டது. தமிழர் உலகத்தோடு ஒத்தவராக, உரிமையோடு வாழவேண்டுமானால் அறிவியல் துறையில் அறிவு பெற்றாலன்றி முடியாது.

நம் நாடு பல அறிவாளிகளைத் தோற்றுவித்தது. சித்தர்கள் மருத்துவத் துறையிலே உழைத்து மக்கள் உடல் வளத்தைக் காத்தார்கள். பலபெரியார்கள் உயிர்வளத்துக்கான ஆராய்ச்சிகள்செய்து உயர்ந்த கொள்கைகள் கொண்ட சமயங்களைத் தோற்றுவித்தனர். 5000 ஆண்டுகளுக்கு முன் அயலார் தமிழ் நாட்டிற் காலடி வைத்தனர். தந்திரத்தால் குட்டிச் சிறையிலிட்டனர்தமிழரை. அறிவியல் நூல்கள் அழிக்கப்பட்டன. உரு மாற்றப்பட்டன. தனதென்று சொல்லிக் கொள்ள என்ன விருக்கிறது தமிழருக்கு? புதையல் கிடைத்தாலுண்டு, புதையலும் தமிழ் நாட்டில் தோண்டப்படுவதில்லை. தமிழர் வரலாறு மோகஞ்சோதாராவும், ஹரப்பாவும், சொல்லுகின்றன.

சென்றதை எண்ணிப் பயனில்லை. எண்ணுதிருப்பதுவும் ஆபத்து. முன்னர்த் தாழ்வடைந்த வகையை அறிந்துகொண்டால் இனியும் ஏமாருதிருக்கலாமல்லவா? முற்போக்குக்கான வழியைச் செப்பனிடலாமல்லவா? இடையிலேமுளைக்கும் தடைகளை வெட்டி வீழ்த்திப் பாதையைச் சீர் செய்யலாமல்லவா ?

இன்றைய முற்போக்குப்பாதை அறிவியலிலே யுளது. அறிவியல் இதுகாறும் தமிழருக்கு எட்டாக் கனியாக இருந்தது. ஏறிப் பறிக்க எண்ணியவர் சிலர் ; ஏறியவர் மிகச் சிலர்; பழமிருக்கு மிடத்தை அணுகியவர் மிகமிகச் சிலர்; பறித்தவர் மிக, மிக, மிகச் சிலர்; ஏன்? மரம் தமிழ் மரமல்ல. ஆங்கில மரம். அந்த மரத்தில் ஏறப் பழகவேண்டும். அது முதியவர்களாலே முடிவதில்லை. இளைஞர்கள் பழகுவதற்கே பத்துப் பன்னிரண்டாண்டுகள் ஆகின்றன. அதன் பின் பழத்தருகே செல்லவேண்டும். அப்பழம் கையிலகப்படுமோ? அகப்பட்டாலும் வாயில் போட முடியுமோ? வாயில் போட்டாலும் தொண்டை விக்கிக் கொள்ளுமோ? என்ற இத்தகைய நிலையில் தமிழருக்கும் அறிவியல் துறைக்கும் உள்ள தொடர்பு இருந்து வந்தது. விளக்கமாகச் சொல்ல வேண்டுமாளுல் அறிவியல் நூல்கள் எல்லாம் ஆங்கிலத்திலுள்ளன. அந் நூல்களைப் பயில வேண்டுமாளுல் பல ஆண்டுகள் ஆங்கிலம் பயில வேண்டும். அதன் பின்னர் அறிவியல் நூல்களைப் படிக்க வேண்டும். அப்படிப் படிக்க முன்வரும் இளைஞர்களுக்கு எத்தனையோ தொல்லைகள், பொருள் வளமின்மை, குடும்பப் பொறுப்பு, என்பன போன்ற எத்தனையோ உள. இவற்றையும் சமாளித்துப் படித்துவிட்டால் அவர்கள் அறிவியல் ஆராய்ச்சியைத் தொடர்ந்து செய்ய நாட்டில் ஆதரவேது?

தமிழர் இளமையிலேயே அறிவியல் துறையில் பழக வேண்டும். அதற்குத் தமிழ் மொழியிலே அறிவியல் நூல்கள் அமைய வேண்டும். அப்படி அமைவதால் வேற்று மொழி பயில செலவிடப்படும் பல ஆண்டுகள் அறிவியற் பயிற்சிக்கே ஆகும். அதனுல் பெரும் பயன் விளையுமென்று, பல ஆண்டுகளாகக் கிளர்ச்சிகள் இருந்து வந்தன. பிற நாட்டு அறிவியல் நூல்களைத் தமிழில் மொழி பெயர்க்கவேண்டுமென்று சுப்பிரமணிய பாரதியார் பாடினுர். நமது கரந்தைத் தமிழ்ச்

சங்கம் பல முடிபுகள் செய்து அரசியலார்க்கு அனுப்பியது. அரசிய லாரும் ஒப்பி அறிவியற் பாடங்களைத் தமிழில் பயில ஆணை யிட்டார்கள்.

பாடப் புத்தகங்கள் எழுதப்பட்டன. அறிவியலிலே எத்தனையோ புத்தம் புதுக் கருத்துக்கள் தோன்றியுள்ளன; புதிய உலோகங்கள் கண்டு பிடிக்கப்பட்டன; செயற்கைப் பொருள்கள் அளவிறந்து ஆக்கப்பட்டுள்ளன; ஆயிரக்கணக்கான புதுப் பொறிகளும் கருவி களும் செய்யப்பட்டுள்ளன. இவற்றைக் குறிக்கத் தமிழில் சொற்க ளில்லை. பாட புத்தகங்கள் எழுதியவர்கள் தம் மனம்போனவாறு சொற்களை ஆக்கினர். சிலர் ஆங்கிலச் சொற்களையே தமிழில் எழுதினர், சிலர் தமிழ்ச் சொற்கள் கொண்டே புதுக் கருத்துக்களை விளக்கும் புதுச் சொற்களை ஆக்கினர். பலர் வடமொழிச் சொற்கள் கொண்டு புதுச் சொற்கள் ஆக்கினர். மாணவர் இவற்றைப் பயிலு வதில் படுந் துன்பம் கொஞ்சமல்ல. ஒரே பொருள் பற்றிய பாடத்தைப் வெவ்வேறு புத்தகத்தில் பயிலும் மாணவர் ஒருவருக் கொருவர் கேட்டுத் தெரிந்துகொள்ள முடியாது. ஒரு மாணவன் 'சல்பூரிக் ஆசிட்' (Sulfuric Acid) என்று படிப்பான், ஒருவன் 'கந்தகிகா அமிலம்' என்பான், மற்றொருவன் 'கந்தகக் காடி' என்று சொல்லுவான், படிக்கும் பொருள் ஒன்றுதான் என்பது இந்த மூவருக்கும் தெரியாது. எனவே தமிழில் எழுதப்படும் அறிவியல் நூல்களிலே புதுக் கருத்துக்கள், பொருள்கள் கருவிகளைக் குறிக்க உபயோகிக்க வேண்டிய சொற்களை திட்டம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

சென்னை அரசாங்கம் முதன் முதலாக வெளியிட்ட 'கலைச் சொற்கள்' 100-க்கு 99 சமஸ்கிருதம். தமிழன்பர்களே! இங்கு சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். அறிவியல் நூல்களைத் தமிழில் படிக்க வேண்டுமென்பது எதற்கு? பொருளை எளிதில் உணர்ந்து கற்கத்தானே. 'கந்தகக் காடி' என்பதைத் தமிழர் எளிதில் உணர்ந்து கொள்ள முடியும். 'கந்தகிகா அமிலத்தை' எப்படி உணர முடியும்? இப்படி இடுகுறிப்பெயராகவே எண்ணிப் படிக்க வேண்டுமென்றால் 'சல்பூரிக் ஆசிட்' என்றே படித்து விடலாமல்லவா?

சமஸ்கிருதம் வழக்கிலில்லா மொழி. இம் மொழியில் தமிழ் நாட்டுக் குடிகளில் 100-க்கு மூவருக்குப் பற்றுண்டு. அம் மூவருள்ளும் அம்மொழி பயின்றவர்கள் ஒருவரே இருக்க முடியும். அப்படி யிருக்க அம் மொழிச் சொற்களை 100-க்கு 97 பேர் தலையில் சுமத்து வானேன்?

சமஸ்கிருதம் பெரும்பாலான தமிழருக்கு உச்சரிக்க வருவதில்லை. தமிழ் ஓர் இனிய மொழி. பேசுவதிலே நாவுக்கோ, தொண்டைக்கோ, குடலுக்கோ ஒரு தொல்லையும் இல்லை. இதைப் பேசிப் பழகிய தமிழருக்கு அடித் தொண்டையால் கத்த வருமா? இன்றியமையாமை தான் என்ன? உச்சரிப்புத்தான் என்ன எளிதாக இருக்கிறதா? எளிதாக இருந்தால் அது வழக்காறற்றுப் போவானேன்.

தெரியாத புரியாத தமிழருக்குப் புறம்பான ஒரு மொழி— உச்சரிக்கவோ கடினமான ஒரு மொழி—உலகவழக்கு அழிந்தொழிந்து போன ஒரு மொழி இந்த மொழியிலே கலைச் சொற்களை அமைப்பதன் கருத்து என்ன? தமிழர் அறிவியற் கலைகளை எளிதிற் கற்று முன்னேறத் தடை செய்வதல்லவா?

இச் சொற்களைப் பாருங்கள் இதன் கருத்து வெளிப்படும்.

ஆங்கிலம்	சமஸ்கிருதம்	தமிழ்
(1) Acetic acid	சாராய காமிலம்	புளிக் காடி
(2) Corbonic acid	இங்காலி காமிலம்	கரியகக் காடி
(3) Chloric acid	ஹரிதகி காமிலம்	பாசிகக் காடி
(4) Fuming acid	தௌமியஅமிலம்	புகையுங் காடி
(5) Hydrocloric acid	அப்ஜ ஹரிதகி காமிலம்	நீர்ப்பாசிக் காடி

தமிழருக்கு இவற்றுள் எவை எளியவை என்பதைப் பாருங்கள்.

வடமொழிக் கலைச் சொற்களை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தோம். 1938-ல் சென்னை மாகாணத் தமிழச் சங்கம் எளிதான 'கலைச்சொற்களை' ஆக்கித் தந்தது. அதுபோது முதலமைச்சராக இருந்த திரு. ச. இராசகோபாலாச்சாரியாரது ஆதரவையும் பெற்றது.

தமிழ்ப் பகைவர் மனம் புழுங்கினர். தென்னிந்திய மொழிகளில் கலைச் சொற்களை எப்படி ஆக்குவது என்ற பெயரால் ஒரு குழு 1940-ல் அரசியலாரால் நியமிக்கப்பட்டது. அதில் தமிழர் ஒருவரேனும் இல்லை. இக் குழு 'கலைச் சொற்களை' ஆக்கித் தந்துள்ளது. இவைகளிலும் பெரும்பாலும் சமஸ்கிருதமே. இந்தக் கலைச்சொற் பட்டியை அரசாங்கம் வெளியிட்டு அச் சொற்கள் ஆளப்பட்ட புத்தகங்களையே பாடமாக வைக்க வேண்டுமென்று அரசாங்கம் ஆணையிடப் போகிறதென்று செய்திகள் விளம்பரம் செய்யப்பட்டிருக்கின்றன. இதனைத் தமிழர்கள் வாளாவிருந்து விடுவதா? தடுப்பதா?

தமிழ்ப் பெருமக்களே இன்று ஆய்ந்து முடிவு செய்வீர்களாக!

உ

மகிபாலன்பட்டி,
19—6—46.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்துக் கல்லூரி ஆசிரியரும் நீண்ட காலமாக அச் சங்கத்திற்கும் தமிழுக்கும் தொண்டாற்றி வருகின்றவர்களும், தமிழ் நூல்களைச் செவ்வையாகக் கற்றுப் பல அரிய இலக்கியங்களுக்கு உரையெழுதியவர்களும் ஆகிய **கரந்தைக் கவியரசு, திரு. R. வேங்கடாசலம் பிள்ளை** யவர்களை இத் தமிழுலகம் நன்கு அறியும். எனக்கு நெடுநாட் பழகிய நண்பராவர். இவர்களுக்கு அண்மையில் அறுபதாம் ஆண்டு வாழ்த்து விழா நடைபெறும். அக் காலத்துத் தமிழ் அன்பர்களின் நன்கொடையாக ஒரு பொற்கிழி வழங்கப் பல அன்பர்கள் முற்பட்டிருக்கின்றனர். அதற்குத் தமிழ்ச் செல்வர்களாகிய அன்பர்கள் எல்லோரும் மனம் உவந்து நல்கும் பொருள், அவர்களுக்கு உதவியாதலோடு தமிழ் ஆக்கத்திற்கும் சிறந்த பயன் விளைப்பதாகும். மு. க.

1946, நவம்பர், 10உ கரந்தைத் தமிழ்ச் சங்கப்பெருமன்றத்தில்,
சங்கத்தலைவர், முத்தமிழ்வள்ளல், இராவ் பகதூர்,
திருவாளர் A. Y. அருளாநந்தசாமி நாடார்
அவர்கள் தலைமையில் நிகழ்ந்த பொதுக்கூட்டத்தில்

நிறைவேறிய முடிபுகள்.

1. சென்னைப் புலவர் கழகத்தினர் 24—8—46-ல் செய்துள்ள தமிழாசிரியர் பற்றிய முடிபுகளுள், 11, 12, 21 ஆகிய மூன்றும் நீங்க, ஏனையவற்றை இக்கூட்டம் முழுமனதுடன் ஆதரிக்கின்றது.

2. எல்லாப் பாடநூல்களிலும் உள்ள பிறமொழிச் சொற்களை நீக்கித் தமிழ்மொழிச் சொற்களைச் சேர்க்கவேண்டும் எனவும், அடியிற் குறித்தபடி எழுதப்பட்ட பாடநூல்களையே பாடப் புத்தகங்களாக அமைக்க வேண்டும் எனவும் இக்கூட்டம் அரசினரை வேண்டுகின்றது.

ஒவ்வொரு மொழியில் தொடக்கத்திற் கற்குஞ் சொற்களையே பிறமொழியிலும் தொடக்கத்திற் கற்கவேண்டி இருத்தலினாலும், இதனால் கலையுணர்ச்சி தடைபடுதலாலும், தேவநாகரி, உருது ஆகிய இரு எழுத்துக்களிலும் கற்கவேண்டுமெனக் காந்தியார் விரும்புகின்றமையானும், இருவகை எழுத்துக்களையும் இளஞ்சிறார்கள் கற்க மிகக் கடினமாக இருக்கின்றமையானும், இந்துத்தானியை இந்நாட்டு உயர்நிலைப் பள்ளிகளில் பாடமாகஅமைத்து, மேலும் அமைக்க முயற்சிக்கும் சென்னை அமைச்சரவர்கள், இந்துத்தானி நுழைத்தலைக் குறித்துக் கல்வித் துறையில் முதிர்ந்த பயிற்சி யுள்ளவர்களைக் கலந்து ஆய்ந்து ஒரு முடிவிற்கு வரவேண்டுமென இக்கூட்டம் கேட்டுக்கொள்ளுகின்றது.

3. (அ) சாத்திரியார்குழு (Sastri's Committee) வெளியிட்டுள்ள தமிழ்க் கலைச்சொற்களைத் திருத்தி அமைக்கச் சென்னைக் கல்வி அமைச்சர் திரு. R. P. சேதுப்பிள்ளை, திரு. இ. மு. சுப்பிரமணிய பிள்ளை, திரு. அ. முத்தையா முதலிய தமிழன்பர்களைப் புதிதாக நியமித்திருக்கிறதை இக்கூட்டம் போற்றுகிறது. அவர்கள் யாண்டும் தூய தமிழ்ச் சொற்களையே தேர்வார்களென இக்கூட்டம் எதிர்பார்க்கிறது.

(ஆ) இவர்கள் மிகஅண்மையில் சேர்க்கப்பட்டிருப்பதாலும், சேர்க்கப்பட்ட பின் பலநாட் கழித்தே வேலை தொடங்கியிருப்ப

தாலும், 15—11—'46 உக்குள் பதினுயிரக் கணக்கான சொற்களைத் திருத்தியமைக்கவேண்டிய இடைப்பொழுது இல்லாததாலும், அரை குறை வேலையில் பிழைமிகுத்திருப்பது எதிர்பார்க்கக்கூடுமாதலாலும், அவர்களுக்கு இன்னும் வேண்டிய காலம் கொடுக்கும்படி இக்கூட்டம் கல்வியமைச்சரை வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறது.

(இ) அவ்வாறு திருத்தமுடைய வேலையில் ஈடுபட இச்சங்கம் வெளியிட்டுவரும் தமிழ்ப்பொழிலில் கலைச்சொற்களைப் பற்றியும், கலைகளைப்பற்றியும் தமிழ்ப் பண்பாட்டிற்கேற்ப நூல்கள், கட்டுரைகள் வெளியிட்டு வருகிற திரு. சாமி. வேலாயுதம் பிள்ளையையும் திரு. த. பு. நவநீதகிருட்டின நாயுடுவையும் சேர்த்துக்கொள்வதுடன், திருவாளர்கள், தேவநேயப் பாவாணர், சிவசைலம் பிள்ளை, சண்முக சுந்தர முதலியார் டாக்டர், அ. சிதம்பரநாதச்செட்டியார் முதலியவர்களுடைய உதவியும் பெறவேண்டுமென இக்கூட்டம் கேட்டுக் கொள்ளுகிறது.

(ஈ) சாத்திரியார் குழுவினர் கலைச்சொற்களில் கீழ்க்கண்ட குறைபாடுகள் இருப்பதை நீக்க அரிதின் முயல வேண்டுமென இக்கூட்டம் தெரிவித்துக் கொள்ளுகிறது :—

(i) முதலில் சென்னை ஆசிரியர் கல்லூரியினர் வெளியீட்டிலுள்ள (Teacher's College Bulletins) ஆங்கிலச் சொற்களும் அவற்றின் மொழிபெயர்ப்புகளுள் சிலவும் விடுபட்டுள்ளன.

(ii) சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தார் வெளியிட்டவற்றிலுள்ள சில சொற்களும் காணப்படவில்லை.

(iii) சிலசொற்கள் மாறுபட்ட பகுதியின்கீழ்க் காணப்படுகின்றன. எடுத்துக் காட்டாகப் பூத நூற்சொற்கள் கணக்கியலில், காணப்படுகின்றன.

(iv) ஒரே ஆங்கிலச் சொல்லிற்குப் பொருள் ஒன்ருயிருந்தும், வெவ்வேறு பகுதியில் வெவ்வேறு தமிழ்ச் சொல்லையும், ஒரே தமிழ்ச்சொல் வெவ்வேறு பகுதியில் வெவ்வேறு ஆங்கிலச் சொல்லையும் குறிப்பதாகக் காணப்படுகிறது.

(v) தமிழ்ப் பண்பாட்டிற்கு மாருன, தமிழர்களால் உச்சரிக்க இயலாத ஒலிகள் உரப்பியும், நீட்டியும், கனைத்தும் ஒலிக்கும்படி வீணுகப் புகுத்தப் பட்டிருக்கின்றன.

(vi) அவ்வொலிகளைக் குறிக்கப் புள்ளியும் கோடும் மேலும் கீழும் போட்டு மயங்க வைத்திருக்கின்றனர்.

(vii) சில ஆங்கிலச் சொல்லிற்கு ஏற்ற தமிழ்ச் சொல்லைக் காணப் பல பகுதிகளைப் புரட்டிப் பார்க்கவேண்டியதாயிருக்கிறது.

(viii) ஒரு தமிழ்ச் சொல்லிற்கு ஏற்ற ஆங்கிலச் சொல்லைக் கண்டு பிடிக்க வழியே யில்லை.

இக்குறைகளை நீக்கிப் பல சொற்றிரட்டுக்களைப் பயன் படுத்தி விடுபட்டவற்றைச் சேர்த்துக்கொண்டும், எல்லாப் பகுதி களையும் ஒன்றுபடுத்தி ஆங்கிலம்—தமிழ்; தமிழ்—ஆங்கிலம் என்கிற முறையில் அகர வரிசையில் அமைத்து ஒத்துப் பார்த்துத் திருத்தியும், தமிழில் இல்லாத ஒலிகளைத் தமிழிலக்கணமுறைப்படி தமிழ்ப்படுத்தி யும் வெளியிட இக்கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது.

4. (அ) மாகாணங்கள் மொழிவழிப் பிரிக்கப்பட்டு அந்தந்த நாட்டு மொழியிலேயே ஆட்சி நடத்தப்படவேண்டுமெனும் முறையை இக்கூட்டம் பெரிதும் போற்றுவதுடன் அதற்கான ஏற்பாடுகளை உடன் தொடங்கவேண்டுமென இக்கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது.

(ஆ) தொடக்கக் கல்வித் திட்டத்தில் நாட்டு மொழியையே (Regional Language) முதன் மொழியாகக் கொள்ள வேண்டுமெனக் கல்வி அமைச்சர் ஏற்படுத்தியிருப்பதை மீண்டும் போற்றுவதுடன் இரண்டாந்தரக் கல்வித் திட்டத்திலும் (Secondary Education Scheme) அவ்வாறே அமைக்கும்படி இக் கூட்டம் கேட்டுக் கொள்ளு கிறது.

(இ) ஆங்கிலம், இந்தி, சமக்கிருதம் முதலிய வேற்றுமொழி களை இரண்டாந்தரக் கல்விபயிலும் இளம்பருவத்தில் மாணவர்கள் மேல் சுமத்தி அவர்களைக் கலங்கச் செய்யாது கல்லூரி வகுப்புகளில் மட்டும் அவைகளை விருப்பபாடமாகவைக்கும்படி இக்கூட்டம்கேட்டுக் கொள்ளுகிறது. மேலும் அவ்வேற்றுமொழிப் பயிற்சி; தேவையுள்ள வர்களுக்குமட்டுமே அளிக்கப் படவேண்டும். தேவையற்றவருக்கு அவைகளை அளிப்பதைப் போல் வீண் வேலை வேறு இருக்க முடியா தென இக்கூட்டம் அறிவிக்கிறது.

பிரிவு

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்க இலவச மருத்துவ சாலையின் இலவச மருத்துவராகப் பணியாற்றிச் சங்கத்தைச் சிறப்பித்த சங்கப் பேரன்பர் சிவராமகிருட்டினப் பிள்ளை அவர்கள், *25—9—'46*, புதன் கிழமை, பிற்பகல் *2.15* மணிக்கு இவ்வுலக வாழ்வை நீத்து மறைந் தார்கள், என்பதனைக் கேட்டு மிகமிக வருந்துகின்றோம். இவரைப் பிரிந்து வருந்தும் இவர் குடும்பத்தினர்க்கு எம் ஆழ்ந்த துயரினை அறிவித்துக் கொள்ளுகின்றோம். இவரின்னுயிர் இறைவன் றிருவடி நீழலில் இன்புற்றுத் திளைக்க இறைவனை வழுத்துகின்றோம்.

பொழிலாசிரியர்.

தமிழ்ப்பெரும் புலவரின் பிரிவு.

தோற்றம் 1857. *மறைவு 12—10—'46.*

தமிழ்ப் பெருங் கவிஞர். முதுபெரும் புலவர். இராவுசாகிபு. வெ. ப. சுப்பிரமணிய முதலியார், G. B. V. C. அவர்கள் 12–10–'46 ஆம் நாள் இம் மண்ணுலக வாழ்வினின்றும் மறைந்தார்கள் என்பது கேட்டு மிகமிக வருந்துகின்றோம். இவர்கள் நம் சங்கத்தின் மாட்டும், சங்கம் வெளியிடும் "தமிழ்ப்பொழில்" மாட்டும், எம்போன்ற தொண்டர் மாட்டும், மிகுந்த பற்றுக்கொண்டவர்கள். நம் சங்க ஆண்டு விழாவில் தலைமை தாங்கிச் சிறப்பித்தவர்கள். பல செய்யுள் நூல்களும், உரைநடை நூல்களும், மொழிபெயர்ப்பு நூல்களும் இவர்களால் இயற்றி அளிக்கப் பெற்றுள்ளன. இவர்களைக் குறித்து நாவலர். ச. சோமசுந்தர பாரதியார் அவர்கள், "இக்காலத் திந்நாட்டு அகத்தியரே எனத் தமிழ்க் கடலைக் குடித்துப் புலமைத் தலைமை தாங்குபவர்" என்று போற்றிப் புகழ்ந்துள்ளமை ஒன்றேகொண்டு இவர்தம் அருமை பெருமைகளை யாம் அறிந்துகொள்ளலாம். இவர்கள் இயற்றியுள்ள நூல்களாவன :—

(1) சுவர்க்க நீக்கம் (Paradise Lost) (2) கோம்பி விருத்தம் (3) கல்வி விளக்கம் 4, 5, 6, கால்நடை மருத்துவ நூல்கள் (7) நெல்லைச் சிலேடை வெண்பா (8) அகலிகை வெண்பா (9) தனிக் கவித் திரட்டு (10) இராமாயண உள்ளுறை பொருளும், தென்னிந்திய சாதி வரலாறும் (11) கம்ப ராமாயண சாரம் (12) கம்ப ராமாயணத்தையும் பெரிய புராணத்தையும் எரிக்க முயற்சி (13) பகவத்கீதை கும்மி (14) சருவசன செபம் (15) ஆறுமுக நாவலர் சரித்திரம் முதலியன.

இந்நூல்களெல்லாம் இவர்களின் மொழிபெயர்க்கும் ஆற்றலினை யும், பாவியற்றும் பாங்கினையும், உரைநடை யெழுதும் உரன்வளத் தினையும், ஆராய்ச்சித் திறனையும், கவிநயங்காணும் கவின்பெறு வன்மையினையும் புலப்படுத்துவனவாகும். இதுபோது நீதியந் தலைவராய் இலங்கும் இவரது மாணவர், திரு. தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான், M. A., அவர்கள் "முதலியார் அவர்களும் அவர் களுடைய் நூல்களும்" என்ற தலைப்பில் அழகிய ஆய்வுரை நூல் ஒன்றினை வெளியிட்டுள்ளார்.

இத்தகு சிறப்பெல்லாம் உடைய இப் பெரியார் நம் சங்கத்தின் தொடர்புகொண்டு சங்க வளர்ச்சியில் ஆர்வமும் கருத்தும்கொண்டு தம் வாழ்நாளளவும் சங்க வெளியீடாகிய தமிழ்ப் பொழில் உறுப்பினராக இருந்து வந்தார்கள். இப்புலவர் பெருமகனார் அவர்களின் பிரிவு தமிழ் நாட்டிற்கும் தமிழ் மொழிக்கும் மிகப்பெரிய பேரிழப்பாகும். இறைவன் திருவடி நீழலில் இவர்தம் இன்னுயிர் இன்புற்றுத் திளைக்க என இறைவன் திருவடிகளை வழுத்தி வணங்கு கின்றோம்.

பொழிலாசிரியர்.

புறப்பொருள் பூக்கள்

மா. சிவகுருநாதன், ஆசிரியர், சுந்தரப்பெருமாள்கோயில்.

முற்றொடர்ச்சி: துணர் 22; மலர் 2; பக்கம் 60.

[1] **வஞ்சி :**—பகைவரின் நாட்டைக் கொள்ளக் கருதிய மன்னன் தன் படையுடன் வஞ்சிசூடிப் போர்மேல் செல்வான்.

இது ஒருவகைக்கொடி. இதனை, சிந்தி என்றும் கூறுவர். இக்கொடி வேற்று மரங்களில் படர்ந்திருக்கும். அக்கொடியினின்றும் கணக்கற்றவிழுதுகள் பூமியை நோக்கித் தொங்கும். இவ்வாறு தொங்கும் விழுதுகள் நூல் இழை பருமனில் இருந்து சிறுவிரல் பருமன் வரை இருக்கும். இவ்விழுதுகள் நெளிந்தும் துவண்டும் நேர்த்தியாய்க் காணப்படும்.

[2] **காஞ்சி :**—தன் நாட்டின்மீது வேற்றரசன் படைகொண்டு வந்தபோது ஓரரசன் இப்பூவினைச் சூடி எதிர்த்து அமராடத் தொடங்குவான்.

இது ஒரு மரம். எட்டி எனவும் வழங்கும் பூ பொன்னிறமானது. இதன் காய் பல்வித மருந்துகளுக்குப் பயன்படுகின்றது.

நொச்சி :—மாற்றரசன் தனது மதிற்புறத்தே வந்து முற்றுகை செய்த காலத்தில் ஓரரசன் இப்பூவினைச்சூடி மதிலை உள் நின்று காப்பான்.

இப்பூ மிக்க சிறியது. நீல நிறம் உடையது. இது செடியாயும், மரமாயும்; நீர்க்கரைகளிலும் வேலி ஓரங்களிலும் காணப்படும். இச்செடியின் கிளைகளின் நுனியில் கதிர்போல அரும்புகள் காணப்படும். பின்னர் நாளடைவில் இப்பூக்கள் இரண்டொன்றாய் மலரும். இதன் இலைகள் மூன்று பிரிவை உடையதாய், பின்புறம் வெண்ணிறமாய் இருக்குமாதலால் இதனை வெண்நொச்சி எனவும் வழங்குவர். இது சிவபெருமானுக்குரிய [3] ஐவகை இலைகளில் ஒன்று.

இதுவன்றி கருநொச்சி என்ற வேறொரு செடி கருத்த இலையுடனும் வெண்ணிறப் பூவுடனும் இருக்கின்றது.

உழிஞை :—பகைவரின் மதிலைக் கொள்ளக் கருதிய மன்னன் இதனைச் சூடி, கோட்டையை முற்றுகை இடுவான்.

இதனை, 'கொற்றான்', 'முடக்கத்தான்' எனவும் கூறுவர். இது ஒரு கொடி. இது தரையோடு தரையாய், புஞ்சை நில ஓரங்களில் படர்ந்திருக்கும். கொடியின் நுனியில் பூக்கள் சிறிதாய் வெண்ணிறத்தோடு இருக்கும். இதன் காய் ஒரு சிறு எலுமிச்சம்பழ அளவில் ஊதிக்கட்டிய காற்றுப் பையைப் (Balloon) போல் உப்பி இருக்கும். இவ்விலைகள் பித்தநோய்க்குத் தக்க மருந்தாய்ப் பயன்படுகிறது.

---

1 இவ்வஞ்சியில் வேறொரு வகையும் இருக்குமெனத் தெரிகிறது.
2 இதன் வர்ணனை நேரில் காணாது கேட்டு எழுதியதாகும்.
3 ஐவகை இலைகள் :—கூவிளம் (வில்வம்); மகாவிங்கம்; விளா; கிளுவை; நொச்சி.

கல்வி முறை பற்றிய அறிக்கை.

தமிழ் அன்பர்களே !

சென்னை அரசினர் அண்மையில் கல்வி முறையைத் திருத்தி யமைப்பதற்குச் சில கேள்விகளடங்கிய பட்டியை வெளியிட்டிருப்ப தும், அது செய்தித்தாள்களில் வெளிவந்திருப்பதும் தாங்கள் அறிவீர்கள்.

அக் கேள்விகட்கு விடையளிக்கவேண்டியது தமிழ் அறிஞர் களின் கடமையாகும்.

இப்போது அடியிற்கண்ட முடிபுகளைச் செய்யுமாறு நாம் அரசி னர்க்குத் தெரிவித்துக்கொள்ளவேண்டியது இன்றியமையாததாகும்.

(1) தமிழ் நாட்டில் தமிழ் மொழியே தமிழ் இலக்கணத் தோடு எல்லாருக்கும் பள்ளிகளில் முதன் மொழியாகச் சொல்லிக் கொடுத்தல் வேண்டும்.

(2) பூதோளம், வரலாறு முதலிய பிற பாடங்களை யெல்லாம் தமிழ்மொழி வாயிலாகவே பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் சொல்லிக் கொடுத்தல் வேண்டும்.

(3) மேற்படி கலைநூல்களில் எடுத்தாளவேண்டிய கலைச் சொற்களெல்லாம் கூடியவரை தமிழ்ச் சொற்களாகவே இருத்தல் வேண்டும்.

(4) இந்திய நாட்டு வரலாற்றில் இதுகாறும் தமிழ் நாட்டு வரலாறு சரியாகவே எழுதப்படாததையும், உண்மைக்கு மாறாக ஆரியரை உயர்த்தியும் திராவிடரைத் தாழ்த்தியும் எழுதி வந்திருப் பதையும் எடுத்துக் காட்டி, இனித் தமிழ் நாட்டு வரலாற்றை விரிவாக வும், ஆரியர் திராவிடரைப்பற்றி உண்மைக்கு மாறாகாமலும் வர லாற்று நூல் எழுதப்பெறுதல் வேண்டும்.

(5) பள்ளிகளில் அறிக்கை முதலிய யாவும் இனித் தமிழிலேயே எழுதச் செய்வதோடு ஆசிரியர்களும் மாணவர்களும் தமிழிலேயே பேசுமாறு செய்தலும் வேண்டும்.

(6) கணித நூலில் இப்போதுள்ள ரோமன் எண்களை நீக்கித் தமிழ் எண்களையே பயன்படுத்துதல் வேண்டும்.

(7) ஆங்கில மொழியை அல்லது ஏனைய மொழிகளில் ஏதாவதொன்றை இரண்டாவது மொழியாக மாணவர்கள் பயிலலாம்.

(8) பாட நூல்களையெல்லாம் தகுதிவாய்ந்த பெரிய பதிப்பாளர்களைக் கொண்டே வெளியிடச் செய்தல் வேண்டும்.

(9) பூகோளம், வரலாறு, அறிவு நூல் முதலியவற்றைத் தமிழ்ப் புலமை யில்லாத எல். டி. ஆசிரியர்கள் எழுதினாலும், அவை தமிழ்ப் புலவர்களில் ஒருவரைக்கொண்டு பிழை திருத்தஞ் செய்யப்பெறுதல் வேண்டும்,

(10) தமிழ் மொழி முதன் மொழியாக அமைக்கப் பெறுவதால், கீழ் வகுப்புகளிலிருந்தே தமிழ்ப்புலமை நிறைவிற் கேற்பப் படி முறையாகத் தமிழ்நூல்கள் பாடமாக அமைக்கப்பெறுதல் வேண்டும்.

(11) இப்போது பள்ளிகளிலிருக்கிற எல். டி. ஆசிரியர்கள் தமிழ்ப்புலமை பெறுவதற்கு ஓராண்டுப் பயிற்சிபெறச் செய்தல் வேண்டும்.

(12) இப்போது பள்ளிகளிலிருக்கிற தமிழ்ப் புலவர்கள் பூகோளம், வரலாறு, கணிதம் முதலிய கலை நூல்களில் ஏதாவது இரண்டு கலைப் பாடங்களில் ஓராண்டுப் பயிற்சிபெறச் செய்தல் வேண்டும்.

(13) தமிழ்ப்புலவர் (வித்துவான்) கட்கு எல். டி. ஆசிரியர் கட்குள்ள சம்பளத் திட்டம் அமைக்கப்பெறுதல் வேண்டும்.

(14) தொடக்கப் (எலிமெண்டரி) பள்ளிகளில் ஆடவர் பெண்டிர் இருபாலர்க்கும் ஓரே வகையான கல்வி முறையும், அதன் பின்னர் அவரவர்க்கு ஏற்றபடி வேறுபட்ட கல்வி முறையும் அமைக்கப் பெறுதல் வேண்டும்.

(15) தொடக்கப் பள்ளிகளில் பெண்களையே ஆசிரியர்களாக அமைப்பது சிறுவர் கல்வி வளர்ச்சிக்கு ஏற்புடைத்தாகும்.

147, பவழக்காரத் தெரு,
சென்னை—2-10-46.

இங்ஙனம்,
தமிழறிஞர் கழகத்தார்.

சென்னை அரசாங்கத் தமிழ்க் கலைச்சொல்லாக்கக் கமிட்டியார் தமிழ்மொழிக்கு விளைக்கும் இடையூற்றைத் தவிர்க்கத் தமிழ் நாட்டின் தலைவர்களுக்கோர் வேண்டுகோள்!

"செந்தமிழ் நாடெனும்" இசை.

தண்டமிழ் நாட்டின் தலைவர்களே தமிழ்த்
தாய்படும் இன்னல் தவிர்ப்பீர்களே உங்கள்
பெண்டுபிள் ளைக்கிடை யூறுநேர்ந்தால் நீங்கள்
பேசாதி ருப்பீரோ சொல்வீர்களே! (த)

அப்பனும் அம்மையும் பேசுந்தமிழ் மாவும்
அம்மாஅம் மாவென் றழைக்குந்தமிழ் என்றும்
ஒப்புயர் வில்லாதே ஓங்குந்தமிழ் பூ
வுலகின் முதன்முதற் றோன்றுந்தமிழ் (த)

சித்தர்கள் தேடிய செல்வத்தமிழ் பாண்டி,
சேர சோழ மன்னர் காத்ததமிழ் நம்
முத்தமிழ்ச் சங்கப் புலவர் முனிவர்கள்
முற்றுந் துறந்தோர் வளர்த்ததமிழ் (த)

குறுமுனி வாரிக் குடித்ததமிழ் இளங்
கோவள்ளு வரள்ளிக் கொண்டதமிழ் கண்ணிற்
கருமணி போன்றொளிர் கன்னித்தமிழ் கம்பர்
காளமே கம்பொழி கவிதைத்தமிழ் (த)

நால்வர்கள் ஆழ்வார்கள் நாயன்மார்கள் திரு
நாவினில் நின்றுந டித்ததமிழ் நாம்
பாலுண் ணும் போதே பருகுந்தமிழ் நூலின்
பயனொரு நான்கும் அளிக்குந்தமிழ் (த)

சிலம்பு வளைமணி மேகலையும் குழை
சிந்தா மணியணி தெய்வத்தமிழ் இன்று
புலம்பித் தவித்துடல் புண்படப் பார்த்துநாம்
பூமியில் வாழ்தல் புகழுடைத்தோ! (த)

நாவிற் கினிய தமிழ்மொழியிற் பிற
நச்சு மொழிச்சொற் புகுத்தவிட்டு நாம்
சாவியாய்ப் போன பதர்களைப்போல் வீட்டிற்
சாம்பிக் கிடத்தல் தகுதிகொலோ! (த)

ஆங்கிலப் பல்கலைச் சொற்களுக்குச் சரி
யான தமிழ்ச்சொல் லமைப்பதற்கு மிக
ஆங்கில முந்தமி ழும்படித் தோர்பிறர்
அன்றித் தமிழர்கள் யாருமின்றோ! (த)

தமிழிற்பல் கலைச்சொல் லாக்குங் குழுவில்
தமிழர்யா ரேனும் ஒருவருண்டோ நம்
அமிழ்தத் தமிழை அருவருப் பாய்பேசும்
அயல்மொழி யார்க்கிதி லென்னவேலை (த)

ஆடு மழையில் நனையுதென் றுநாய்கள்
அக்கரை யோடே யழுவதுபோல் மிகப்
பாடு படுகிறார் பைந்தமிழ்க் காய்ப்பிறர்
பல்கலைச் சொல்லாக்கப் பாவம்அந்தோ (த)

முத்துப் பவழம் மணிகளைப் போற்சொற்கள்
முத்தமிழ் வைப்பிற் குவிந்திருக்கும் அந்தோ
புத்திக்கு றைவா ? பொறாமையா ? தமிழிற்
பொருத்த மானசொல் லிலையென் பார்க்கு (த)

இந்திநம் நாட்டிற் பொதுமொழி யாகிடின்
எத்துணை தீமையுண் டத்துணையும் இன்று
நந்தமி ழிற்கலைச் சொல்லாக்க முன்வந்தோர்
நயவஞ்சச் சூழ்ச்சியி னாலேயுண்டாம் (த)

ஊர்களின் பேர்களை மாற்றினார்கள் மக்கட்
குள்ள தமிழ்ப்பேரை யும்மாற்றினார் தெய்வப்
பேர்களைக் கூடப்பு ரட்டினா ரின்றுநாம்
பேசுந் தமிழ்க்கே உலைவைக்கின்றார் (த)

பைந்தமிழ் மாணவர் பல்கலையைப் பிற
பாடையின் மூலம்ப யில்வாரானால் நம்
செந்தமி ழிற்கலைச் சொல்லே யிலையென்று
தீண்டவு மாட்டார் தெரிவீர்களே ! (த)

நரிக்கி டந்தரின் கிடைக்கி ரண்டாடு
நாள்தோறுங் கேட்குமென் பாரதுபோல் பிறர்
இருப்ப தற்கிடங் கொடுத்த தாலுங்கட்
கென்னவுண் டெல்லாம் எமதென்கின்றார் (த)

புற்றினிற் பாம்பு புகுந்தந்தக் கறையான்
புற்றினைப் பாம்புப்புற் றென்பதுபோல் அந்தோ
மற்றவர் புக்க இடந்தந்ததாற் றமிழ்
மாநிலங் கூடத் தமதென்கிறார் (த)

பார்முழு துங்கோவில கட்டிவைத்தீ ரதிற்
பார்ப்பனப் பாம்பு புகுந்துகொண்டு நம்மேல்
சீறி விழுந்துள்ளே செல்லாதே சாமியைத்
தீண்டாதே யென்று விரட்டுதையோ (த)

இன்னமும் நீங்கள் விழிப்படை யாதையோ
ஏமாந் திருந்தா லெதிர்காலத்தில் உங்கள்
பன்னலம் பைந்தமிழ் நாடு முழுவதும்
பார்ப்பன மயமாம் கண்டுகொள்வீர் (த)

செ. அ. நா. மடாலயம்
சென்னை

சுவாமி அருணகிரிநாதர்.

31–8–41ல் கோகலே மண்டபப் பொதுக் கூட்டத்திற் பாடப்பெற்றது.

கலைச்சொற்களின் சீர்கேடு

பின்பக்கம் தரும் கலைச்சொல் அட்டவணையைப் பாருங்கள்!

முதற் பத்தியில் ... ஆங்கிலக் கலைச்சொற்கள்

இரண்டாம்பத்தியில் ... 1932-ல் அரசினர் அச்சிட்ட கலைச்சொற்கள்

மூன்றும் பத்தியில் ... 1938-ல் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் வெளியிட்ட கலைச்சொற்கள்

இரண்டாம் பத்தியிலுள்ள கலைச்சொற்களும் சொற்றொடர்களும் பொருள் விளங்காதனவாய், கரடு முரடாய், நீளமாய், நூல்களில் எடுத்தாளுவதற்குத் தகுதியற்றனவாய்க் காணப்படுகின்றன அல்லவா? அச் சொற்களும் சொற்றொடர்களும் பெரும்பான்மை சமஸ்கிருதமே. மேலும், ஓர் ஆங்கிலக் கலைச்சொல் இரண்டு மூன்று சொற்களால் மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றது. இச் சொற்களைக் கொண்ட கலைப் பாடநூல்களும் சில வெளிவந்திருக்கின்றன.

மூன்றும் பத்தியிலுள்ள கலைச்சொற்கள் முதன் மந்திரியாயிருந்த திரு. ச. இராசகோபாலாச்சாரியார் பொருளுதவி பெற்றுச் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தாரால் வெளியிடப்பெற்றவை. அவை பெரும்பாலும் கலப்பில்லாத் தமிழ்ச் சொற்களாகும். மேலும், அவை வழங்குவதற்கு மிக எளிமையும், எளிய பொருள் விளக்கமும், இன்னோசையும், ஒரு சொற்றன்மையும் உடையனவாய்ச் சுருங்கிய வடிவிற் காணப்படுகின்றன. இச் சங்கத்தார் நிறுவிய கலைச்சொற் கழகங்களில் தலைவராயிருந்தவர்கள் பின் வருவோராவர்:

பொதுத் தலைவர்: சுவாமி விபுலானந்தர்

க. கணிதம்: திரு. K. S. இராமசாமி ஐயரவர்கள், எம்.ஏ., எல்.டி., கல்வித்துறை. கொழும்பு.

உ. பூதநூல்: திரு. ச. இராசகோபாலாச்சாரியார், தியாகராயநகர்.

ங. வேதிநூல்: சுவாமி விபுலானந்தர்

ச. மரநூல்: M. S. சபேச ஐயரவர்கள், எம். ஏ., சென்னை.

ரு. விலங்குநூல்: S. G. மணவாள இராமாநுசம் அவர்கள், எம். ஏ., சென்னை.

சு. உடலியலும் நலவழியும்: ஷை

எ. பூகோளம்: N. சுப்பிரமணிய ஐயரவர்கள், எம். ஏ., சென்னை.

அ. வரலாறு முதலியன: T. S. நடராச பிள்ளை, பி.ஏ., பி.எல்., சென்னை.

கூ. வேளாண்மை: இராவ்சாகிப் வெ. ப. சுப்பிரமணிய முதலியாரவர்கள்.

இத்தனை அறிஞரும் ஒன்று சேர்ந்து ஆக்கிய கலைச்சொற்கள், சென்னைப் பல்கலைக் கழகத்தாராலும், திருவாங்கூர்ப் பல்கலைக்

கழகத்தாராலும், இலங்கை அரசினராலும் ஆதரவு பெற்றிருக்கின்றன. இவற்றையும் பாடநூல்களில் எடுத்தாளலாம் என்று காங்கிரசு ஆட்சியில் சென்னை மாகாண அரசினர் வெளியிட்ட உத்தரவும் உளது. அதன்படி, பின்னர் வெளிவந்த சில பாடநூல்களில் இக் கலைச்சொல் நூலிலுள்ள சொற்கள் எடுத்தாளப்பட்டிருக்கின்றன. சில பாடநூல்களில் இரண்டு வகையான கலைச் சொற்களும் கலந்தே எழுதப்பட்டிருக்கின்றன. ஆசிரியர் சிலர் இவை இரண்டு நூல்களிலுமில்லாத புதிய சொற்களை ஆக்கி அமைத்திருப்பதாகவும் தெரிகிறது.

அரசினரது கலைச்சொல் நூலில் ஓர் ஆங்கிலச் சொல்லுக்கு இரண்டு மூன்று சொல்லமைப்பு இருப்பதனால் ஆசிரியர் சிலர் தமக்கு விருப்பமான சொற்களை எடுத்தாண்டுமிருக்கின்றனர். எனவே, கலைப்பாட நூல்களெல்லாம் மாணவர்களுக்குக் குழப்பத்தையே தருகின்றன. கலைப்பாடங்களில் மாணவர்கள் பொருள் தெரிய வேண்டியதற்குப் பதிலாக ஒரு பொருட் பல சொற்களைப் பயில வேண்டியவர்களாகின்றார்கள். இஃதென்ன கொடுமை!

கலைப்பாடங்களை ஆங்கிலத்திற் பயிலுவதனால் கலையறிவு பரவுவதற்கில்லை. மாணவர்களும் கற்பதற்கு இடர்ப்படுகின்றார்கள். ஆதலால், அவற்றைத் தமிழிலேயே சொல்லிக்கொடுக்க வேண்டுமென்ற நல்ல திட்டம் அரசாங்கத்தில் வந்தது. இப்போது அந்தத் திட்டம் பயன்படாத வகையில் கலைப்பாடங்களில் முன் சொன்னபடி ஒரே சொல்லுக்குப் பல்வகைச் சொற்களினாற் குழப்பம் உண்டாகிறது. போதாக்குறைக்கு அரசாங்கப் புதிய கலைச்சொற் கழகம், மூன்றாம் பாரம் வரை பாடநூல்களில் எடுத்தாளப்பட்டிருக்கின்ற சொற்கள் அப்படியே இருத்தல் வேண்டுமெனவும், மேற்பாரங்களுக்கு வேண்டிய பாட நூல்களில் எல்லாத் திராவிட மொழிகளுக்கும் பொதுவாகக் கலைச்சொற்களிற் சிலவற்றைச் சமஸ்கிருதமாகவும் சிலவற்றை அப்படியே ஆங்கிலமாகவும் எழுதவேண்டுமெனவும் தீர்மானித்திருக்கிறது.

இது குழப்பத்தின்மேல் குழப்பத்தையே விளைப்பதாகும். எளிய இனிய குழைவான மெல்லிய ஓசையுடைய தமிழ் உரைநடையில், கரடு முரடான உரத்த ஓசையுடைய இயல்பிலே வேறுபட்ட பிற மொழிச் சொற்களைக் கலந்து எழுதிய கலைப் பாடங்களைச் சொல்லிக் கொடுப்பதைவிட, முன்போல் ஆங்கிலத்திலேயே அவைகளைக் கற்குமாறு செய்வது எளிது.

தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் முதலிய திராவிட மொழிகட்குப் பொதுவாகக் கலைச்சொற்கள் அமைப்பது என்பது பொருளற்றதும் வீண் முயற்சியுமாகும்.

தமிழ் தவிர மற்ற மொழிகள் சமஸ்கிருதக் கலப்பினால் உருக்குலைந்துவிட்டன. அவற்றிற்கு இலக்கணமும் சமஸ்கிருத இலக்கணமே. ஆனால், தமிழ் மிகவும் பழமையான மொழி; மற்றத்

திராவிடமொழிகட்குத் தாய்மொழியுமாகும். உலக நடையிற் பயின்ற பழமையான இலக்கணமுடையது; நூற்றுக்கணக்கான தூயதமிழ் இலக்கிய நூல்களையு முடையது.

பிறமொழிக் கலப்பில்லாமல் தமிழிலேயே பேச முடியும்; எழுத முடியும்; கலைச்சொற்களைக் கண்டு பிடிக்கவும் ஆக்கவும் முடியும் என்பதை ஆசிரியர் மறைமலையடிகள், மாணிக்க நாயகர் முதலிய பேரறிஞருடைய பேச்சாலும் எழுத்தாலும் நீங்கள் அறிவீர்கள்.

உயர்திரு. ச. இராசகோபாலாச்சாரியார் அவர்கள் எழுதிய "தமிழில் முடியுமா" என்ற நூலும், கலைச் சொற்கள் என்ற நூலுக்கெழுதிய முன்னுரையும் தமிழிலேயே கலைச் சொற்களை ஆக்க வேண்டுமென்ற கொள்கையை வற்புறுத்துகின்றன. முன்னுரை வருமாறு.

"தமிழில் கலைநூல்களனைத்தையும் எழுதவும் விளக்கவும் முடியும் என்பதைச் சிலர் இன்னும் ஒப்புக்கொள்ளுவதில்லை. இதற்கு முக்கிய காரணம் பௌதிக சாத்திர ஆராய்ச்சிக்கு வேண்டிய சொற்கள் பழக்கத்தில் இல்லாமையே யொழிய வேறில்லை. எந்தப் பாஷையும் அதன் வாயிலாகப் பொருள்களை விளக்க முயன்றாலொழிய, நூல்களுக்கு வேண்டிய மொழிகளும், தொடர் மொழிகளும் அதன்கண் அமைவதில்லை. பொருள்களை எடுத்துக்கொண்டு விளக்க முயன்றால் மொழிகள் தாமாகவே சமைந்து பொங்கும். இவ்வாறே ஆங்கிலத்திலும் பிற மேல்நாட்டு மொழிகளிலும் கலைச் சொற்கள் உண்டாகி அம் மொழிகள் வளர்ச்சியடைந்து வருகின்றன.

இந்த அகராதி அநேகபண்டிதர்கள் மிகவும் சிரமப்பட்டு, ஆழ்ந்த சிந்தனை செலுத்தி ஆய்ந்தெடுத்துத் தொகுத்து, பள்ளிக்கூடங்களில் பௌதிக நூல்களைத் தமிழில் போதிக்கவும் புதிய புத்தகங்கள் எழுதவும் பயன்படும் வழியில் ஆக்கப்பட்டதாகும். இதை ஒரு முதற்படியாகவே கருதி அனைவரும் அன்புடன் ஆதரிக்க வேண்டுமாகக் கோருகிறேன்."

சென்னை
16—6—'38 } ச. இராசகோபாலாச்சாரி.

இனி என்ன செய்யவேண்டும்?

கலைச் சொற்களைத் தமிழ் நாட்டிற்குத் தமிழ் மொழியிலேயே, தமிழ் அறிஞர்களைக்கொண்டே அமைக்கவேண்டுமென்றும், இப்போதமைந்திருக்கிற கலைச்சொற் கமிட்டியைக் கலைத்துவிட வேண்டுமென்றும், கலைச்சொற்களை அமைக்கப் புகுவோர் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தார் வெளியிட்டிருக்கிற கலைச்சொற்களையே அடிப்படையாகக் கொள்ளல்வேண்டுமென்றும், 1932-ல் அரசினர் வெளியிட்ட கலைச்சொற்களை ஆட்சியினின்றும் விலக்கவேண்டுமென்றும் தக்க கிளர்ச்சிகள் வாயிலாக அரசாங்கத்தாருக்குத் தெரிவித்துக் கொள்ளல் வேண்டும்.

ஆங்கிலக் கலைச் சொற்கள் :-	1932-ல் அரசினர் வெளியிட்ட கலைச் சொற்கள் :-	சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தார் வெளியிட்ட கலைச் சொற்கள் :-
Basic	க்ஷாரமான	அடிய
,, Mono	ஏகக்ஷாரத்வமான	ஓரடிய
Census	குலஸ்திரீ புருஷ பால விருத்த ஆயவ்யய பரிமாணம்	குடிமதிப்பு
Electrolysis	வித்யுத் வியோகம் வித்யுத் விஸ்லேஷணம், மின்வியோகம்	மின்பகுக்கை
Nitrate	பாக்கியமிகஜம்	காலகை
Oxygen	பிராண வாயு	தீயகம்
Hydrogen	அப்ஜனகம்	நீரகம்
Proteins	ஓஜஸ்திரவியங்கள்	பிசிதம்
Latent Heat	அந்தர்ய உஷ்ணம்	மறைகனல்
Disinfectant	பூதிநாசினி	நச்சிநீக்கி, தொற்று நீக்கி
Excretory organs	விசர்ஜன இந்திரியங்கள்	கழிவுறுப்புக்கள்
Lungs	புப்புசம்	நுரையீரல்
Spinal Cord	கசேருலதை	முதுகு நடுநரம்பு
Tendon	ஸநாயு	தசைநார்
Duodenum	பிரதமாந்திரம்	சிறுகுடல் அடி
Gastric Juice	ஜடராக்னி நீர்	அகட்டு நீர்
Berry	பூர்ணபுஷ்டம்	முழுச்சதைக்கனி
Evaporation	பரிசோஷணம், அனலீகரணம்	ஆவியாதல்
Carpel	கர்ப்பபத்ரம்	முசலிமூலம்
Filament	கிஞ்ஜல்கம்	பராகச்சாளி நரம்பு
Marginal	தாரலம்பனம்	விளிம்பு ஒட்டிய
Labiate	ஓஷ்டாகிருதி	உதடமைந்த
Pistil	கர்ப்பகோசம்	முசலி
Stigma	கிலாக்ரம்	முசலி முடி
Pistillode	நிஷ்பல கர்பம்	கரண்ட முசலி
Leaflet	பத்ரகம்	சிற்றிலை
Sexual Reproduction	லிங்க விருத்தி	கலவிப்பெருக்கம்

Sheath	... பர்ணகோசம்	... இலைப்பட்டை
Stoma	... சுஷிரம்	... இலைத்துளை
Palmate	... தாலபின்னம்	... உள்ளங்கைபோன்ற
Papilionaceous	... சலாபாக்ருதி	... அவரைப்பூவுருவு [டைய
Reproduction	... பிரஜாவிருத்தி	... இனப்பெருக்கம்
Syncarpous	... சம்யுக்த கர்பம்	... இணை முசலிய
Legume	... துவிவிதாரண	... இருபுறவெடிகனி
Retina	... அக்ஷிகம்	... கண்திரை
Gullet	... அன்னவாகி	... உணவுக் குழாய்
Rotate	... சக்கிராகிருதி	... உடுவடிவ
Undetermined	... அநிஷ்கர்ஷித	... தேரா
Similitude	... ஸாஜாத்யம்	... ஒருவடிவுடைமை
Pantograph	... சித்ரமுத்ரகம்	... பெருக்கிவரை [கருவி
Triangle	... திரிகோணம், த்ரிபூஜை...	முக்கோணம்
Theorem	... பிரமேயம், நியாயோக்தி	தேற்றம்
Equilateral Triangle	ஸமபுஜத்ரிகோணம் ...	சமபக்க முக் [கோணம்
Central symmetry ...	மத்யஸாம்யம்	... மையச்சமச்சீர்
Trinomial	... த்ரயாங்கராசி	... மூவுறுப்புச் [சேர்ப்பு
Zero	... சூன்யம், பூஜ்யம்	... சுன்னம், சுழி
Similar	... ஸமரூப, ஸஜாதீய	... வடிவொத்த

சென்னைப் புலவர் கழகம்

6, வேளாளர் தெரு, புரசைப்பாக்கம், சென்னை.

சென்னையரசாங்கக் கல்வியமைச்சரவர்கள் திருமுன்னர்க்கு,

மாட்சிமிக்க ஐயா,

வணக்கம். தாங்கள் கல்வியமைச்சராக அலுவல் ஏற்றது முதல், தாய் மொழி உயர்வு குறித்தும், எளிய நிலையில் இருந்து வரும் ஆசிரியர் உயர்வு குறித்தும் செய்து வரும் அரிய முயற்சிகளைப் பெரிதும் பாராட்டுகின்றோம். பொதுவாகக் கல்வி வளர்ச்சி குறித்தும், சிறப்பாகத் தமிழ்மொழியாக்கங் குறித்தும் எங்கள் கழகம் செய்துள்ள முடிபுகள் (24—8—46) ஈண்டுக் குறிக்கப் பெற்றுள்ளன. அவற்றை நன்கு ஆய்ந்து ஆவனவற்றை விரைந்து செய்யுமாறு மிகவும் பணிவுடன் வேண்டிக் கொள்ளுகின்றோம்.

நிறை வேற்றப்பெற்ற முடிபுகள்.

1. புலவர் இடைத் தேர்விலுள்ள (Vidvan Preliminary Examination) பாடத்திட்டத்திற் கேற்ப, நுழைவுத் தேர்வுக்கும் (Vidvan Entrance Examination) பாடத் திட்டம் அமைக்கப்பெற வேண்டும்.

2. புலவர் நுழைவு வகுப்புக்கும், (Entrance) இடை வகுப்புக்கும் (Preliminary) உள்ள பாடத்திட்டத்தில் பத்தாவது வகுப்பிற்குரிய அளவு பொது அறிவுப் பாடத் திட்டம் சேர்க்கப்படவேண்டும்.

3. உயர்நிலைப் பள்ளிகளில் மாற்றப்பட்டது போலவே கல்லூரிகளிலும் (Colleges) தாய்மொழியே முதன் மொழியாக (Part I) மாற்றப்பட வேண்டும்.

4. தனித் தமிழில் பல்கலைக் கழகத் தேர்வு பெறுவோர்க்குப் ‘ புலவர் ’ என்னும் பட்டமே வழங்கப்பட வேண்டும். (அண்ணாமலைப் பல்கலைக் கழகம் வழங்கி வருகின்றது).

5. புலவர் பட்டமும் பட்டமளிப்பு விழாவிலேயே (Annual Convocation) வழங்கப்படவேண்டும்.

6. புலவர் பட்டம் பெற்றவர்கட்கும் ஏனைய பல்கலைக் கழகப் பட்டம் பெற்றவர்களைப் போல, பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்கு (Senate) உறுப்பினராகும் உரிமையும், வாக்குரிமையும் வழங்கப்பட வேண்டும்.

7. மொழித் தேர்வுக்குத் தனியாக வருவோர்க்கு (Private candidates for the Oriental Title Examination) முப்பது வயது என்று மாற்றப்பட்டிருப்பதை முன்பு இருந்தது போல இருபது வயதாக மாற்ற வேண்டும்.

8. ஏனைய தேர்வுகளைப் போலவே தமிழ் முதலிய மொழித் தேர்வுகளும் செப்டம்பர் மாதத்திலும் நடத்தப்பட வேண்டும்.

9. இப்போது உள்ள B. O. L. தேர்வுத் திட்டம் (Transitory Regulation) 1948-ம் ஆண்டுடன் நிறுத்தப்பட்டு விடாமல் குறைந்தது 1951-ம் ஆண்டு வரையிலாவது நீடிக்கப்படவேண்டும்.

10. தமிழ் மொழியில் M. A. பட்டத் தேர்வை 1948-ம் ஆண்டு டன் நிறுத்திவிடாது எப்பொழுதும் வைத்தல் வேண்டும்.

11. தமிழ் நாட்டிலுள்ள மடங்களின்வழி வரும் வருவாய் முழுவதும் தனித் தமிழ்க் கல்வி வளர்ச்சிக்கென்றே செலவிடப் படுதல் வேண்டும்.

12. தொடக்கப் பள்ளிகளில் ஆண்டுக்கு இருநூற்றிருபதாக இருக்கும் வேலை நாட்களை இருநூறாகக் குறைத்தல் வேண்டும்.

13. எல்லாப்பள்ளிகளிலும் ஐந்தாம் வகுப்பு வரையிலும் 20 மாணவர்களும், மேல் மூன்றும் வகுப்புவரை (III Form) 25 மாணவர்களும், பத்தாம் வகுப்புவரை (S. S. L. C.) 30 மாணவர் களுமே அதிகத்தொகையாகச் (Maximum number) சேர்க்கப்பட வேண்டுமென்ற திட்டம் வகுக்கப்பட வேண்டும்.

14. எந்த ஆசிரியர்க்கும் வாரத்திற்கு இருபத்தைந்து பாட நேரத்திற்கு மேல் (Periods) கொடுக்கக் கூடாது.

15. மொழிப் பாடத்திற்கு வாரத்திற்குக் குறைந்தது எட்டு பாட நேரமாவது (Periods) கொடுக்க வேண்டுமென்று கட்டாயப் படுத்த வேண்டும்.

16. மொழியாசிரியர்கட்கும் ஏனைய ஆசிரியர்களைப் போலவே ஊதியமும் தகுதியும் வழங்கப்படல் வேண்டும்.

17. பத்தாம் வகுப்புத் தேர்வுத்தாள் (S. S. L. C.) திருத்துவதில் ஏனைய பாடங்களைத் திருத்துவோர்க்குக் (Assistant Examiner) கொடுக்கப்படுவதைப் போலவே தாய்மொழி திருத்துவோர்க்கும் உதவித் தொகை (Remuneration) கொடுக்கப்பட வேண்டும்.

18. பத்தாம் வகுப்புத் தேர்வுக்குரிய தலைமைத் தேர்வாளர் (Chief Examiner) பதவி மூன்றும் உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியர் கட்கே கொடுக்கப்படல் வேண்டும்.

19. பத்தாம் வகுப்புத் தமிழ்ப் பாடப்புத்தக அமைப்புக் குழு வில் உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியர்களே நியமிக்கப்படவேண்டும்.

20. தொடக்கப் பள்ளியிறுதி வகுப்பிற்கு (Eighth Std.) அரசிய லார் நடத்துந் தேர்வில், தமிழ்த் தேர்வாளராகவும், துணைத் தமிழ்த் தேர்வாளராகவும் தமிழ்ப் புலவர்களே நியமிக்கப்படவேண்டும்.

21. பத்தாம் வகுப்பு முதலிய அரசாங்கத் தேர்வுகளின் மதிப் பெண் (Marks) பதிவு செய்யும் வேலை அரசியலார் பள்ளிகளிலுள்ள ஆசிரியர்கட்கு மட்டுமன்றி ஏனைய ஆசிரியர்கட்கும் கொடுக்கப்பட வேண்டும்.

22. அரசியலார் பள்ளிகளிலுள்ள ஆசிரியர்களை மட்டும் கண்காணிப்பாளர் (Dy. Inspector) முதலியவர்களாக நியமனம் செய்வதைப் போலவே ஏனைய பள்ளி ஆசிரியர்களையும் நியமனம் செய்தல் வேண்டும்.

23. பாடப் புத்தகங்களெல்லாம் பள்ளிக்கூட ஆசிரியர்களாலேயே எழுதப்பட்டனவாக இருத்தல் வேண்டும்.

24. ஆசிரியர்களுடைய பிள்ளைகளுக்கு அந்தந்தப் பள்ளிகளில் சம்பளமின்றிக் (Tution fee) கல்வி யளிக்கப்படவேண்டும்.

25. அரசியலார் பள்ளிகளிலும், (Government Schools) நகராண்மைக் கழகப் பள்ளிகளிலும் (Municipal Schools), நாட்டாண்மைக் கழகப் பள்ளிகளிலும் (Dt. Board Schools), தனிப் பள்ளிகளிலும் (Schools under private managements) வேலை செய்யும் எல்லா ஆசிரியர்கட்கும் ஒரே படித்தரமான ஊதியம் அளிக்கும்படி கட்டாயப்படுத்த வேண்டும். (இலங்கையில் இவ்வாறே உளது),

26. மேற் குறித்தவாறு ஊதியத் திட்டம் செய்யும்போது நம் மாகாணத்து ஊர்களை மூன்று வகையாகப் பிரித்து அந்தந்தப் பிரிவுகளிலுள்ள ஊர்களின் நிலைமைக்குத் தக்கவாறு ஆசிரியர்கட்குத் தனிப்படி (Extra allowance) கொடுக்கப்படவேண்டும். (Vide Sargent Scheme)

27. அரசியலார் பள்ளிகளில் வழக்கத்தில் இருப்பதுபோலவே, ஏனைய பள்ளிகளிலுள்ள ஆசிரியர்களுக்கும் எல்லா வகையான விடுமுறைகளும் (Casual, Privilege & Medical) கொடுக்க வேண்டுமென்று அரசியலார் கட்டாயப்படுத்தவேண்டும்.

28. ஆசிரியர்கள் ஒரு பள்ளியினின்று வேறு பள்ளிக்குச் செல்லும்போது அவர்களுடைய முன்னைய வேலை யாண்டுகளும் (Service) கணக்கிடப்பட வேண்டுமென்று அரசியலார் கட்டாயப் படுத்த வேண்டும்.

29. தற்போது வழக்கத்திலிருக்கிற பட்டமளிப்பு விழாவிற்குரிய உடை நம் நாட்டுக்கேற்றவாறு தக்க முறையில் திருத்தியமைக்கப்படுவது நலமாயிருக்கும்.

30. பாராளுமன்றத்தில் (Legislative Assembly) ஆசிரியர்களுக்குக் குறைந்தது மூன்று இடங்களாவது கொடுக்கப்படவேண்டும்.

புரசைப்பாக்கம்,
சென்னை,
13—9—'46.

இங்ஙனம்,
சென்னைப் புலவர் கழகத்தார்.

சென்னை, பச்சையப்பன் கல்லூரித் தலைமைத் தமிழ்ப்பேராசிரியர்

உயர்திரு, வித்துவான். மு. **வரதராசனார்,** B.O.L., M.O.L.,

அவர்கள் தலைமையில் வேலூரில் 30—9—1946 ல் நடந்த

வடார்க்காடு மாவட்டத் தமிழ்ப்புலவர்

மாநாட்டின் முடிபுகள் :—

1. தாய் மொழியை முதன் மொழி யாக்கினமைக்கு இம்மாநாடு பொதுவாக அரசியலாரையும், சிறப்பாகக் கல்வி மந்திரியாரையும் பாராட்டுகின்றது.

2. உயர்நிலைப் பள்ளிகளில் முதன் மொழி கற்பித்தற்கு ஒரு வாரத்திற்கு மொழி பெயர்ப்புத் தவிர, ஏழு, காலப்பகுதியாவது (Period) கொடுக்கப்படவேண்டும்.

3. தமிழ் மொழியை முதன் மொழியாக்கினமைக்கு ஏற்றவாறு பள்ளி அதிகாரிகள் ஆசிரியர் பெயர் வரிசைகளில் தமிழாசிரியர் பெயர்களை முதன்மையாக எழுதல்வேண்டும்.

4. (a) உயர்நிலைப்பள்ளிகளில் வேலை செய்யும் தாய் மொழி ஆசிரியர்கட்கு L. T. ஆசிரியர்களைப் போலவே சம்பளத் திட்டம் முதலிய எல்லா வகைகளும் சமமாக இருக்கவேண்டும்.

(b) ஒரே தகுதி (புலவர் பட்டம்) பெற்ற தமிழாசிரியர்களிடையே மற்றெந்த ஆசிரியர்களிடையேயும் காணமுடியாத தலைமை, (Senior), உதவி (Junior) என்ற பிரிவு இருப்பது மிகமிகக்கேடானது. இப்பிரிவை வெகு விரைவில் போக்கவேண்டும்.

5. ஆசிரியப் பயிற்சிப் பள்ளிகள் எல்லாவற்றிலும் பயிற்சியும் வித்துவான் பட்டமும் பெற்ற தமிழ்ப்புலவர்களையே தமிழாசிரியர்களாக நியமிக்கவேண்டும்.

6. உயர்நிலைப்பள்ளி இறுதித்தேர்வு (S. S. L. C.,) எழுதுமிடத்திற்கு மேற்பார்வையாளர்களாகத் (Hall Superintendents) தமிழாசிரியர்களையும் நியமிக்கவேண்டும்.

7. தமிழ்மொழியில் புலவர் (வித்துவான்) பட்டம் பெறுகிறவர்களுக்கு உரிய பாடங்கள் ஆறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

தேர்விற்குச் செல்வோர் ஒரு முறை ஒன்று அல்லது இரண்டு பகுதிகளில் தேர்ச்சி பெறுவிட்டால் அவர் மறுமுறை தேர்விற்குச் செல்லும்பொழுது, மீண்டும் ஆறு பகுதிகளையும் எழுதியே தீரவேண்டியிருக்கிறது. B. A. முதலிய தேர்விற்குச் செல்வோர் தேர்வுபெருத பகுதியைமட்டும் எழுதித் தேர்ச்சி பெறுகின்றனர். இவ்வுரிமையைத் தமிழ்ப்புலவர் தேர்விற்குச் செல்வோருக்கும் அளித்தேதீரவேண்டும்.

8. B. A. முதலிய தேர்விற்குச் செல்வோர் ஆண்டில் இருமுறை மார்ச்சு, செப்டம்பர் தேர்வு எழுதுவதுபோல் தமிழ்ப்புலவர் தேர்விற்குச் செல்வோருக்கும் ஆண்டில் இருமுறைத் தேர்வு எழுதும் உரிமை தரல்வேண்டும்.

9. (a) சென்னைப் பல்கலைக் கழகத்தார் நடத்தும் வித்துவான் தேர்விற்குத் தனிப்பட்ட முறையில் செல்லுவோருக்கு வயது முப்பதாக இருப்பதை இருப்பதாக்கவேண்டும்.

(b) வயது சர்டிபிகேட் (Certificate) ஒரு பதிவு பெற்ற டாக்டர் இடம் பெற்ருல் போதும்.

10. மேனாட்டுக் கலை நூல்கள் இயன்ற வரையில் தனித்தமிழ்ச் சொற்களால் மொழி பெயர்க்கப்படவேண்டும்.

11. தொடக்கப்பள்ளி முதலாக உயர்நிலைப்பள்ளி இறுதிவரையில் உள்ள தமிழாசிரியர்களை மேற்பார்வையிட மேற்பார்வையாளர்கள் தமிழ் அறிஞராகவே இருத்தல் வேண்டும்.

12. பதிவுபெற்ற பட்டதாரிகளுக்குப் பல்கலைக் கழகத் தேர்வுகளில் வாக்குரிமை இருத்தல்போல், தாய் மொழிப் பட்டமாகிய வித்துவான் பட்டம் பெற்றவர்களிடமும் பதிவு செய்யவும் வாக்குரிமை அளிக்கவும் இடந்தரவேண்டும்.

13. மொழி பெயர்ப்புப்பகுதி ஆங்கில அறிவைச் சோதிப்பதாக் இருப்பதால் அதனை ஆங்கிலப் பாடத்தோடு சேர்த்துத் தமிழுக்கே தனியாக நூறு எண்கள் (Marks) வைக்குமாறு இம்மாநாடு கேட்டுக் கொள்கின்றது.

14. வித்துவான் பட்டத்தேர்வில் வெற்றிபெற்றுத் தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக ஆசிரியத் தொழிலில் இருந்து B. O. L. பட்டம் பெற விரும்புவோர், இன்டர்மீடியட் தேர்வுக்குச் செல்லும்போது மீண்டும் மூன்றும் பகுதி நான்காம் பிரிவு (III Part D. Group) எழுதாமலேயே இன்டர்மீடியட் முதல் பிரிவு (English) மட்டும் எழுதி B.O.L. தேர்வுக்குச் செல்லலாம் என்று விதி வகுக்குமாறு சென்னைப் பல்கலைக் கழகத்தாரை இம்மாநாடு வேண்டிக்கொள்கிற து.

15. தமிழ் மொழியின் முன்னேற்றமும் தமிழ் மக்களின் முன்னேற்றமும் கருதித் தமிழ் மாகாணம் விரைவில் பிரிக்கப்படல் வேண்டும்.

16. தமிழாசிரியர்கட்குத் திருத்தும் வேலை அதிகமாக இருப்பதால் ஒவ்வொரு பள்ளியிலும் திருத்தும் ஆசிரியரை (Tutor) நியமித்தல்வேண்டும்.

17. தற்போதுள்ள பாடப்புத்தக தேர்ச்சிக் குழுவினர் (Text Book Commitee) தேர்ந்தெடுக்கும் தமிழ்ப் பாடப் புத்தகங்களில் பற்பல குறைகள் வெளிப் படையாகக் காணக்கிடக்கின்றன. இக் குறைபாடுகளை உடனடியாக நீக்கத் தமிழில் வித்துவான் பட்டம் பெற்றவர்களையே தமிழ் நூல்களைத் தேர்ந்தெடுக்கும் குழுவில் அமைக்க வேண்டும்.

18. தேர்ந்தெடுக்கப்படும் புத்தகங்களில் தமிழ் நாட்டு மன்னர்களின் ஆட்சித்திறன், போர் முறை கொடைத்தன்மை, செந்தமிழ் வளர்த்த சிரிய பண்பு முதலியவற்றையும், புலவரின் பரந்த குறிக்கோளையும், வள்ளல்களின் வள்ளண்மையையும், தமிழரின் நாகரிகத்தையும் அடிப்படையாகக்கொண்ட பாடங்களும் அமையுமாறு பாடப் புத்தகக் குழுவினர் ஏற்பாடு செய்யவேண்டும்.

19. சென்னை திருச்சி ஆகிய இரண்டு அனைந்திந்திய வானொலி நிலயங்களில் தமிழ் இலக்கியச் சுவையைப் பொதுமக்கள் பெரிதும் பெற இப்போது வாரத்திற்கு நான்கு நிமிடங்கள் இருப்பதைவிட அதிகமான நேரத்தைப் பயன்படுத்த உத்திரவிடும்படி சென்னை P.W. டிபார்ட்மென்ட் காரியதரிசி (Secretary to the Government of Madras, P. W. Department) அவர்களை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

இங்ஙனம்:

C. S. இராசாப் பிள்ளை,
தலைவர்.

K. A. திருவேங்கடன்,
அமைச்சர்.

அரசியலார் விடுத்துள்ள வினாக்களுக்கு

5—11—46-ல் தஞ்சைப் பரி. பேதுரு உயர்தரக் கலாசாலைத் தமிழாசிரியர் உயர்திரு. வித்துவான். வீ. சண்முகம் அவர்கள் தலைமையில்

தஞ்சைத் தமிழாசிரியர் கழகம் கண்ட முடிபுகள்.

Secondary Education :—

1. (i) நாகரிக வாழ்க்கையமைந்த மனிதனாய் வாழ்வதற்கேற்ற அறிவைப் பெறல்.

(ii) S. S. L. C. யால் அவ்வறிவைப் பெறுவதில்லை.

(a) பாடங்களில் சில திருத்தங்கள் வேண்டும்.

(b) இருநிலைகள் வேண்டியதில்லை.

(c) 'வான் ஒலி' பள்ளிகளில் வேண்டும்.

(d) இப்பொழுதிருக்கும் பாடத் திட்டத்தின் நிலையிலும் ஒலிபரப்ப வசதி செய்துகொள்ள இயலும்.

(e) முன் படித்த பாடங்களைத் திருப்பிப் படிக்க வேண்டியிருத்தலின் காலம் கழிகிறது. இம்முறையை மாற்றலாம்.

(f) 25 to 30 மாணவர்கள் தான் ஒரு வகுப்பில் இருத்தல் வேண்டும்.

Specialisation :—

(d) (i) V Form-ல் தங்கள் விருப்பத்திற்கேற்ற கலையில் தனியறிவைப் பெற வசதி பெறல் வேண்டும்.

Medium :—

(a) இந்நாள் இருக்கும் L. T. ஆசிரியர்கள் சிறிது காலம் தமிழில் பயிற்சி பெறுவராயின் அவர்களால் தாய் மொழியில் இனிதாக எல்லாப் பாடங்களையும் கற்பித்தல் கூடும்.

(b) சிறிது தாய் மொழியில் பயிற்சி பெறல் வேண்டும்.

(c) (இப்பொழுதுள்ள நிலை மாறி) 'University teacher's training' இலும் எல்லாவற்றையும் தாய் மொழியில் கற்பித்தல் வேண்டும்.

Regional Language :—

(a) எளிய பாடல்களைத் தாமே படித்து அறிந்து மகிழக்கூடிய 'Intermediate' தமிழறிவையாவது பெறுதல் வேண்டும்.

(b) Formal Grammar தமிழுக்கு மிக இன்றியமையாததாதலின் அவசியம் வேண்டும்.

(c) Lower forms, Upper forms என்ற வேறுபாடின்றி எல்லா வகுப்புகளுக்கும் வித்துவான் பட்டம் பெற்ற தமிழாசிரியர்களே இருத்தல் வேண்டும்.

(d) தனித் தமிழ் வித்துவான்கள் கிடைக்கப்பெறுவிடின் அப்பொழுது அத்தேர்வுக்குச் சென்று வெற்றி பெறுதவர்களையோ தமிழ் B. A., Honours-களையோ சிலகாலம் வைத்துக் கொள்ளலாம்.

(e) இப்பொழுதிருக்கும் L. T., ஆசிரியர்களின் நிலையில் எல்லா வகையிலும் பண்டிதர்களை அமைத்தல் வேண்டும்.

(f) (i) இப்பொழுதும் பண்டிதர்களுக்கு Special training என்று ஒன்று வேண்டுவதில்லை.

(ii) இவர்கள் படிக்கும் காலத்திலேயே பொது அறிவைப் புகட்டும் நூல்களையும் படிக்கின்றனர். ஆதலின் 'General qualifications' என்ற ஒன்றைப்பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. Training-ம் அவசியமில்லை.

English :—

(c) இரண்டாம் மொழியாக இருத்தல் வேண்டும்.

(d) First Form-ல் இருந்து ஆரம்பிக்கப்பட வேண்டும்.

Hindustani :—

(a) Secondary school-ல் கற்பிக்கப்படல் வேண்டும்.

(b) பிறரொடு உரையாடக் கற்றுக்கொள்ளல் போதியது.

(c) Optional ஆக இருத்தல் வேண்டும்.

(d) II Form, III, IV ஆகிய மூன்று வகுப்புகளில் முடிந்து விடல் வேண்டும்.

(e) Roman script-ல் கற்பிக்கப்படல் வேண்டும்.

Salaries of teachers :—

(a) Pandits and munshis with university degrees or S. S. L. C. eligible and trained as pandits-க்கும் other pandits and munshis-க்கும் இடையே வேற்றுமை வேண்டாம். யாவரையும் ஒன்றுகவே கருதல் வேண்டும்.

(c) சம்பளக் குறைவு இருக்கின்றவரையிலும் Private tution-க்கு அனுமதி வேண்டும். நிறைந்த சம்பளம் (வாழ்க்கைக்குப் போதிய ஊதியம்) கொடுத்தால் இதற்கு அனுமதி வேண்டியதில்லை.

Text Books :—

1. ஆம், கழகங்களின் வாயிலாக நூல்களை வெளியிடல் சிறந்தது.

இங்ஙனம்,

வித்துவான், வீ. சண்முகம்,
கழகத் தலைவர்.

வித்துவான், V. நாட்டார் சிங்கம்,
அமைச்சர்.

கரந்தைக் கவியரசு

திரு. அரங்க (R.) வேங்கடாசலம் பிள்ளையவர்கள்

அறுபதாவது ஆண்டு வாழ்த்து விழா நிகழ்ச்சி.

இவ்வாழ்த்து நிகழ்ச்சி பற்றி அன்பர்கள் முன்னர் எழுதிய வேண்டுகோளும் விழா நிகழ்ச்சி பற்றிக் குறித்திருந்த நாளும் பொழிலன்பர் அறிவர். அக்காலையில் எய்திய சில தடைகள் பற்றி, அன்பர் பலர் விரும்பியாங்குத் தவக்கம் பெற்றிருந்த அவ்விழா, நிகழும் விய ஆண்டு மார்கழித் திங்கள் கச ஆம் நாள் (29—12—'46) ஞாயிறு பிற்பகல் உஉஇ நாழிகை (3 மணி)க்கு, கரந்தைத் தமிழ்ச் சங்கப் பெருமன்றத்தே நிகழும்.

அதுபோது, நம் கவியரசரின் தமிழ்த் தொண்டுகளைப் பாராட்டி வாழ்த்துரை கூறல், 'தமிழ்த்தாய் வாழ்த்து நிதி' யளித்தல் ஆயவை நடைபெறும்.

பிள்ளையவர்களது தமிழ்த் தொண்டுகள் பல. முன்னர் வெளிவந்துள்ள வேண்டுகோளில் விளக்கப்பெற்றுள. அவர்கள், இதுகாலை, கரந்தைப் புலவர் கல்லூரியின் தலைவராக நின்று புரியும் அரிய தொண்டுகள் பாராட்டற்பாலன. உயர்திரு. பண்டிதமணியார், உயர்திரு. பாரதியார், இவர்கள் எழுதியுள பாராட்டுரைகள் இதனுட் பிறிதோரிடத்து வெளிவந்துள.

கவியரசர்தம் பேரன்பர்கள் இவ் விழாவின் சிறப்புக் குறித்து அவர்க்கு ஆற்றியிருக்கும் உதவிகள் மிகப் பாராட்டற்குரியன. அன்னார் அவர்கட்கு விழாவில் அளிக்கும் 'தமிழ்த்தாய் வாழ்த்து நிதி'க்கு, இதுகாறும் நாலாயிர ரூபா அளவில் சேர்த்துள்ளனர்.

தமிழ்ப் புலவர்களைப் பேணும் வள்ளலார் இன்றும் தமிழகத்தில் உள்ளார் எனும் உண்மையை நாட்ட ஒரு பெருவள்ளலார் ஆயிர ரூபா அளித்துளார். இவ் வாழ்த்து நிதி, குறித்தாங்கு மிகச் சிறப்புற்றுயர தமிழ்த்தாயின் தவ மக்களாம் பேரன்பர்கள், உளங்கொண்டு ஆவன புரிவார்களாக. வாழ்த்து நிதி யுதவி, பாராட்டுரைகள், ஆயவற்றை அன்பர்கள் முன்னரே செயலாளர்க்கு அனுப்பி யருள்வார்களாக.

கருந்திட்டைக்குடி.
தஞ்சாவூர்.
19—11—'46.

அ. கணபதி,
அ. பொன்னண்ணா,
செயலாளர்கள்.

தமிழகத்துத் தமிழ்ப் புலவர்களையும், இலக்கியத்தையும் புரக்கும் செல்வப் பெரியார்களுக்கு

(To the Patrons of Tamil Scholars & Literatures, Tamilaham)

தமிழகத்தில், தமிழ்ப் புலமையையும் இலக்கியத்தையும் பேணும் செல்வப் பெரியார்களுக்குக் கரந்தைத் தமிழ்க் கல்லூரித் தலைமைப் பேராசிரியர், **கவியரசு, R. வேங்கடாசலம் பிள்ளை** அவர்களை அறிமுகப் படுத்துவது மிகையாகும். **தமிழவேள்,** காலஞ்சென்ற **உயர்திரு. உமாமகேசுவரம் பிள்ளையவர்களின்** பெரு மதிப்பையும் அன்பையும் உரிமைகொண்ட நற்புலவர் இவர்களென்ருல், இவர்கள் பெருமை புலமைகளுக்குப் பிறசான்றெவையும் வேண்டா. இவர்களொடு பல்லாண்டுகளாக நேரில் நெருங்கிப் பழகியிருக்கின்றேன். நூற் புலமையின் அகலமும், ஆராய்ச்சி யறிவின் ஆழமும், யாரும் பாராட்டாதிருக்க முடியாத பல பண்பு, சால்புகளின் உயர்வும், பழகும்தொறும் அவர்கள்பால் என் மதிப்பையும் நட்பையும் பெருக வளர்க்கின்றன.

தமிழ்ப் புலவரைப் பராமுகம் பண்ணிய பாவகாலம் மறைந்து, செல்வர் தங்கள் கடன் பாராட்டுவதென உணர்ந்து வரும் இக்காலத்தில், இப் புலவரவர்களை ஆர்வத்தோடு ஆதரிப்பதற்கு என்போல்வார் எடுத்துரைக்க அவசியமில்லை. சாதி சமயக் கருத்து வேறுபாடுகளைக் கருதாமல், கல்வி அறிவு ஒழுக்கங்களை ஆதரிக்க விரும்பும் அறனுணரும் பிரபுக்கள் அனைவரும், சிறப்பாக, திருவுயர் செட்டிநாட்டரசர் அவர்கள், திரு. டாக்டர் அழகப்ப செட்டியார் அவர்கள், திரு. குமார ராச அவர்கள், திரு. கரு. முத்து. தியாகராசச் செட்டியார் அவர்கள், மகாலட்சுமி மில் தலைவர். திரு. ராவ் பகதூர் இலட்சுமணன் செட்டியார் அவர்கள் போன்ற திருவுடைத் தெள்ளியாரும், மனமுவந்து, இப்புலவரின் **வைர விழா** (அறுபதாண்டு நிறைவுவிழா)வுக்கு நிதிக்கிழி அருளி, தமிழறமும் வள்ளன்மையும் ஆற்றித் தம் பெருமையைப் போற்றுமாறு கேட்பவர்களுள் நானும் ஒருவன் என வினயத்துடன் அறிவித்துக்கொள்ள விரும்பும்,

பசுமலை,
23—10—'46.

தமிழன், இளசைக் கிழான்,
நாவலன், ச. சோ. பாரதி.